மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தான்குளம்.

அ.வ.எண்.83/2025

ராணி .. வாதி

/எதிர்/

பெருமாள் மற்றும் 3 நபர்கள் ....பிரதிவாதிகள்

## ஸ்தாவர சொத்துக்களின் மதிப்பீடு விபரப் பட்டியல்

| பிரிவு | பரிகாரம் | ஆள்வரை மதிப்பு ரூ. | நீதிமன்ற முத்திரைக் கட்டணம் ரூ. |
|---|---|---|---|
| 27(c) | நிரந்தர உறுத்துக் கட்டளை | 1000/- | 30.00 |

செலுத்தப்பட்டுள்ளது.

/உத்தரவு படி/

(Sd) D. Sathiabama

தலைமை எழுத்தர்.

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தான்குளம்.

முன்னிலை:– திரு.M. சிவராஜேஷ், B.B.A., L.L.B.,

மாவட்ட உரிமையியல் நீதிபதி, சாத்தான்குளம்.

2026 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 07 ஆம் நாள் செவ்வாய்க் கிழமை.

அ.வ.எண்.83/2025

CNR No.TNTT100000892025

தூத்துக்குடி மாவட்டம், சாத்தான்குளம் வட்டம், ஸ்ரீ வெங்கடேஸ்வரபுரம் கிராமம், ஆசீர்வாதபுரம் அஞ்சல், குருகால்பேரி, போஸ்ட் ஆபிஸ் தெரு, கதவு எண்.1/35B என்ற முகவரியில் வசித்து தற்போது, காஞ்சிபுரம் மாவட்டம், கூடுவாஞ்சேரி, நந்திவரம், மாடம் பாக்கம், பிள்ளையார் கோவில் வீதி, கதவு எண்.3/364 என்ற முகவரியில் வசித்து வரும் ராதாகிருஷ்ணன் மனைவி, சுமார் 45 வயதுடைய, ராணி.

.. வாதி

/எதிர்/

1. தூத்துக்குடி மாவட்டம், சாத்தான்குளம் வட்டம், ஸ்ரீ வெங்கடேஸ்வரபுரம் கிராமம், ஆசீர்வாதபுரம் அஞ்சல், குருகால்பேரி, எம்.ஜி.ஆர்.காலனி என்ற முகவரியில் வசித்து வரும், கருப்பன் குமாரர், சுமார் 50 வயதுடைய, பெருமாள்.

2. தூத்துக்குடி மாவட்டம், சாத்தான்குளம் வட்டம், ஸ்ரீ வெங்கடேஸ்வரபுரம் கிராமம், ஆசீர்வாதபுரம் அஞ்சல், குருகால்பேரி, எம்.ஜி.ஆர்.காலனி என்ற முகவரியில் வசித்து வரும், மணி குமாரர், சுமார் 42 வயதுடைய, ஆறுமுகம்.

3. தூத்துக்குடி மாவட்டம், சாத்தான்குளம் வட்டம், சாத்தான்குளம் வட்டாட்சியர் அலுவலகம் வைத்திருக்கும் அதன் வட்டாட்சியர் அவர்கள் மூலம்.

4. தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடி, கோரம்பள்ளம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம் வைத்திருக்கும் அதன் மாவட்ட ஆட்சியர் அவர்கள்.

....பிரதிவாதிகள்

வாதிக்கு பாத்தியப்பட்ட பிராது தபசில் சொத்தினை வாதி சுமூகமாய் அனுபவிப்பதற்கு 1, 2 பிரதிவாதிகளோ, அவர்களது வகையாட்களோ இடையூறு செய்யும்விதமாக, பிராது தபசில் சொத்தில் அமைக்கப்பட்டுள்ள கிழக்குபுற காம்பவுண்ட் சுவரை உடைத்து சேதப்படுத்தவோ அல்லது வேறு எவ்வித வகையிலும் இடையூறு செய்யவோ கூடாதென நிரந்தர உறுத்துக்கட்டளை பிறப்பிக்கும்படிக்கும், வழக்கு செலவுத் தொகை வாதிக்கு பிரதிவாதிகளிடமிருந்து கிடைக்கும்படிக்கும் வாதியால் அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வழக்கு தாக்கல் செய்யப்பட்ட நாள்:– 11.08.2025 மற்றும் 20.08.2025.

வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள்:– 22.08.2025.

தாவா உண்டாகக் காரணமான நாள்:– 20.03.2006 தேதி முதலும், 25.07.2025 தேதி முதலும், 04.08.2025 தேதி முதலும், ஸ்ரீ வெங்கடேஸ்வரபுரம் கிராமத்தில் வைத்து உண்டாகியிருக்கிறது.

| பிரிவு | பரிகாரம் | ஆள்வரை மதிப்பு ரூ. | நீதிமன்ற முத்திரைக் கட்டணம் ரூ. |
|---|---|---|---|
| 27(c) | நிரந்தர உறுத்துக் கட்டளை | 1000/– | 30.00 |

செலுத்தப்பட்டுள்ளது.

இவ்வழக்கானது 22.08.2025 அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இன்று இறுதி விசாரணைக்காக என் முன்பு கொண்டு வரப்பட்டு, வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.G. ராமச்சந்திரன் அவர்களும் 1 மற்றும் 2ம் பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்கள் திருவாளர்கள் V.M. தமிழரசன் மற்றும் P. கௌசல்யா ஆகியோரும், 3 மற்றும் 4ம் பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த அரசு உரிமையியல் உதவி வழக்கறிஞர் நிலை–2 அவர்களும் ஆஜராகியும், 10.03.2026 அன்று பிராதை சீர்திருத்தம் செய்ய தாக்கல் செய்யப்பட்ட இ.ம.எண்.2/2026 மனுவானது 15.06.2026 தேதியில் அனுமதிக்கப்பட்டிருந்தும், 29.06.2026 முதல் சீர்திருத்தம் செய்யப்பட்ட பிராதை தாக்கல் செய்ய நிலுவையில் இருந்து வந்த இவ்வழக்கில், 07.07.2026 ஆகிய இன்று, வாதி ஆஜரில்லாமலும், பிரதிநிதித்துவம் இல்லாமலும், சீர்திருத்தம் செய்யப்பட்ட பிராதை தாக்கல் செய்ய போதிய கால அவகாசம் வழங்கப்பட்டிருந்தும், சீர்திருத்தம் செய்யப்பட்ட பிராதை தாக்கல் செய்ய தவறியதாலும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**<u>தீர்ப்பாணை</u>**

1. வழக்கானது, சீர்திருத்தம் செய்யப்பட்ட பிராதை தாக்கல் செய்ய தவறியதன் காரணமாக தள்ளுபடி செய்யப்படுகிறது.
2. செலவுத் தொகை குறித்து உத்தரவு எதுவும் இல்லை.

**<u>தபசில்</u>**

பாளையங்கோட்டை பதிவு மாவட்டம், நாசரேத் துணை பதிவு மாவட்டம், ஸ்ரீ வெங்கடேஸ்வரபுரம் கிராமம், ஷை பஞ்சாயத்து குருகால்

பேரி வார்டு – 1, குடியிருப்பு, நத்தம் சர்வே எண்.297/2–ல் 1.73 செண்ட் அளவுள்ள 756.25 ச.அடி மனை கிழமேல் அடி 13.75 தென்வடல் அடி 55 க்கு 756.25 சதுர அடியுள்ள காலி மனைக்கு எல்கை.

வடக்கு – காலி நிலம், 1, 2 பிரதிவாதிகள் வீடு.

தெற்கு – கிழமேல் ரோடு

கிழக்கு – தென்வடல் பாதை

மேற்கு – பொன்பாண்டி நாடார் நிலம்.

ஷை நிலத்தில் உள்ள கதவு எண்.1/35B கொண்ட வீடும், அதில் உள்ள குடிநீர் இணைப்பு எண்.392, மின் கட்டண எண்.07369006473–ம் உட்பட தபசில் விபரம் சரி.

2026 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 07 ஆம் நாளாகிய இன்று என்னுடைய கையொப்பமும் இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

(Sd) M. Siva Rajesh,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தான்குளம்.

மா.உ.நீ., சாத்தான்குளம்.
அ.வ.எண் 83/2025
தீர்ப்பாணை.
நாள்:–07.07.2026